Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2024** |
| Deposition of witness for | :: | **PW.3** |
| Name | :: | **நாவக்காள்** |
| Husband's Name | :: | **பாண்டியன்** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**10.02.2026**
**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தாலுகா தொப்பலாக்கரையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், அவர் எனது ஊர்க்காரர். அசா.1 பாண்டியன் எனது கணவர் ஆவார். கடந்த 21.12.2023ம் தேதி மதியம் 03.30 மணியளவில் எங்கள் கடை அருகே என்கணவர் கோழி அறுத்து கொண்டிருக்கும்போது ஆஜர் எதிரி எனது கணவரை தலையிலும், வலது கையிலும் கட்டையால் அடித்தார். எனது கணவரை பார்த்து இங்கு என்னடா மயிரு புடுங்கிற வேலை என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் எனது கணவரை பார்த்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். அங்கிருந்து எனது கணவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள் ஆவார். 3 குழந்தைகளும் பள்ளியில் படித்து வருகிறார்கள். எனது கடைக்கும், வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் பக்கத்தில் தான் உள்ளது, 5 நிமிடத்தில் நடந்து செல்லலாம். எனது குழந்தைகளை யார்

பார்த்து கொள்வோம் என்றால் நானும், எனது கணவரும் சேர்ந்து அவ்வப்போது கடையில் வைத்து பார்த்து கொள்வோம். குழந்தைகள் பள்ளியில் இருந்து வந்தவுடன் யார் பார்த்து கொள்வார்கள் என்றால் நான் பார்த்து கொள்வேன். சம்பவம் நடந்ததாக கூறும் சமயத்தில் நான் குழந்தைகளை பார்த்து கொண்டு வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல, கடையில் தான் இருந்தேன்.

2. எனது கடைக்கு எந்த திசையில் சம்பவம் நடந்தது என்றால் திசை எனக்கு தெரியவில்லை, எனது கடைக்கு அருகே நடந்தது. நான் சம்பவத்தை நேரில் பார்க்காத காரணத்தினால் தான் திசை எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல, நான் சம்பவத்தின்போது கடையில் பூ கட்டி கொண்டு இருந்தேன். எனது கணவர் சந்தனம் என்ற பெண்ணுடன் தவறாக பேசியதாக ஊரில் பேசினார்களா என்றால் இல்லை. நான் எனது வாழ்வாதரத்திற்கு எனது கணவரை நம்பி உள்ள காரணத்தினால் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் செய்த தவறை மறைக்க அதற்கு நான் உடந்தையாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2024** |
| Deposition of witness for | :: | **PW.2** |
| Name | :: | **கனிராஜ்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**10.02.2026**

**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தாலுகா தொப்பலாக்கரையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், அவர் எனது பக்கத்து ஊர்க்காரர், அசா.1 பாண்டியன் எனது தம்பி ஆவார். கடந்த 21.12.2023 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் ஆஜர் எதிரி அசா.1 ஐ கட்டையால் அடித்ததாக நான் கேள்விபட்டேன். விவரம் தெரிந்த உடன் நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று அசா.1 ஐ பார்த்தேன். அவருக்கு தலையிலும், இடது கையிலும் காயம் இருந்தது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ.1 ல் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் நடந்தவற்றை கேட்டு வாக்குமூலம் பெறும்போது செய்து கொடுத்தேன். எத்தனை மணிக்கு மேற்படி கையெழுத்தை செய்தேன் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார் வாக்குமூலத்தை போலீசார் எழுதி என்னிடமும், எனது தம்பி பாண்டியனிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஞாபகம்

இல்லை. சாட்சி தானாக மீண்டும் முன்வந்து வாங்கினார்கள் என்று கூறினார். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும், என்னிடமும் அசா.1 னிடமும் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. சொன்ன நாள் தேதி நேரத்தில் நான் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2024** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **பாண்டியன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**10.02.2026**
**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தாலுகா தொப்பலாக்கரையில் குடியிருந்து மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது பக்கத்து ஊர்க்காரர். க.விலக்கில் என்னுடைய ஒர்க் ஷாப் உள்ளது. அதற்கு அருகே ஆறுமுகம் ேஹாட்டல் உள்ளது. மேற்படி உணவகத்தை ஆறுமுகம்மாள் மற்றும் சந்தனம் என்ற இரண்டு பெண்கள் நடத்தி வருகிறார்கள். அவ்வப்போது ஏதேனும் உதவி வேண்டும் என்றால் என்னிடம் கேட்பார்கள். கடந்த 21.12.2023 ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் அவர்கள் ஒட்டலில் சமைப்பதற்காக கோழியை அறுத்து கொடுக்கும்படி என்னிடம் கேட்டிருந்தார்கள். அதனால் நான் அன்று உணவகத்திற்கு முன்பு உள்ள சாலையில் வைத்து கோழியின் ரோமத்தை நானும், சந்தனமும் சேர்ந்து உரித்து கொண்டிருந்தோம்.

2. அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து இங்கு உனக்கு என்ன வேலை என்று கேட்டு தேவடியா மகனே புண்ட மகனே, ஓம்புதற்காகடா இங்க வந்த என்று அசிங்கமாக திட்டினார். அப்போது கருவேலம் கட்டையால் எனது பின் பக்க தலையில் எதிரி அடித்துவிட்டார். மேலும் என்னை கட்டையால் அடிக்க வரும்போது இடது கையை வைத்து

தடுத்தேன் அதனால் எனக்கு இடது கையில் வீக்க காயம் ஏற்பட்டது. நான்எதிரியை தள்ளிவிட்டேன். அங்கிருந்தவர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். அப்போது எதிரி என்னை பார்த்து உனக்கு இங்க என்னடா சோளி உன்னை கொன்று குழிதோண்டி புதைத்துவிடுவேன் என்று மிரட்டினார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன்.

3. அன்றைய தினம் சுமார் 07.00 அல்லது 07.30 மணியளவில் ரெட்டியபட்டி காவல் நிலையத்திலிருந்து வந்து என்னை விசாரணை செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தபோது காவல் துறையினர் வந்து நடந்த விவரத்தை கேட்டு எழுதி கொண்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள தேவடியா மகனே என்ற வார்த்தையை தவிர மற்ற வார்த்தைகளான புண்ட மகனே, ஓம்புதற்காகடா இங்க வந்த என்று கூறிய வார்த்தைகளை எனது புகார் வாக்குமூலம் மற்றும் போலீசார் விசாரணையின்போது கூறினேனா என்றால் கூறியுள்ளேன். எதிரி என்னை கொன்று குழிதோண்டி புதைத்து விடுவேன் என்று கூறியதாக எனது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை எனது புகார் வாக்குமூலம் மற்றும் போலீசார் விசாரணையின்போது கூறினேனா என்றால் கூறியுள்ளேன். நான் குடியிருக்கும் வீடானது எனது கடையில் இருந்து எவ்வளவு தொலைவில் அமைந்துள்ளது என்றால் சுமார் 300 மீ தொலைவில் அமைந்துள்ளது.

2. எனது கடையில் எனக்கு உதவியாக ஒரு பையன் வேலை செய்கிறானா என்றால் இல்லை, நான் மட்டும் வேலை பார்ப்பேன், அவ்வப்போது எனது மனைவி உதவியாக இருப்பார். மாலை வரையில் எனது மனைவி என்னுடன் உதவியாக வேலை செய்வாரா என்றால்

வேலை செய்வார். கிழமேல் சாலைக்கு வடக்கே தான் என்னுடைய கடை அமைந்துள்ளது என்றால் சரிதான். என்னுடைய கடையும் நான் முதல் விசாரணையில் கூறிய சந்தனத்தின் உணவகமும் அடுத்து அடுத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி உணவகத்தின் கழிவு நீர் கடைக்கு கிழக்கு புறமாக தான் செல்லும் என்றால் சரிதான். மேற்படி உணவகத்திற்கு தேவையான விறகுகளை கிழக்கு பக்கமாக தான் வைத்திருப்பார்கள் என்றால் சரிதான்.

3. நானும், சந்தனம் என்ற பெண்ணும் வெவ்வேறு சமூகத்தினர் என்றால் சரிதான். எதிரி சம்பவம் நடந்ததாக கூறும் தினத்திற்கு இரண்டு மாதங்கள் முன்பு ஊரில் தவறாக பேசுகிறார்கள் என்றும் அதனால் சந்தனத்திடம் நான் பேசகூடாது என்றும் அறிவுரை கூறினாரா என்றால் இல்லை. மேற்படி சந்தனம் எதிரியின் உறவினர் என்றால் சரிதான். சம்பவத்திற்கு மூன்று மாதங்கள் முன்பு நான் பேசுவதால் சந்தனத்தின் கணவர் பிரச்சனை செய்வதாகவும், சந்தனத்தை பிறந்த வீட்டிற்கு திருப்பி அனுப்பிவிடுவதாகவும் திருமணத்தை முறித்து கொள்வதாகவும் பிரச்சனை நடந்ததாக எதிரி என்னிடம் கூறி அதனால் சந்தனத்திடம் பேசக்கூடாது என்று அறிவுரை கூறினார் என்றால் சரியல்ல, சுமார் 4, 5 வருடங்களாகவே சந்தனம் அவருடைய கணவரை பிரிந்து தான் வாழ்கிறார்.

4. என்னுடைய சமூகத்திற்கும், எதிரியின் சமூகத்திற்கும் இடையே எங்கள் ஊரில் ஏற்கனவே பிரச்சனை நடந்து பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய சம்பவத்தின்போது நானும், சந்தனமும் மட்டும் தான் அங்கு இருந்தோம் என்றால் சரியல்ல, சந்தனத்தின் தாயாரும் அங்கு இருந்தார். நான் கூறிய 3 நபர்களை தவிர்த்து வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரியல்ல, எனது மனைவி இருந்தார். என்னுடைய 161 குவிமுச வாக்குமூலத்தின் நகல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி வாக்குமூலத்தின் நகலை படித்து பார்த்துவிட்டு தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு நடந்த சம்பவத்தை வைத்து தான் சாட்சியம் அளிக்கிறேன். நானும், சந்தனமும் தவறாக நடந்து கொள்ளும்போது எதிரி எங்களை பார்த்துவிட்டார் என்றாலும், அப்போது தப்பித்து பின் வழியாக ஓடும்போது கழிவு தண்ணீரில் வழுக்கி பின்பக்கமாக

விழுந்ததில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி எதிரி எங்களை பார்த்த விவரம் வெளியே தெரிந்தால் பிரச்சனை ஆகிவிடும் என்று வழுக்கி விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை தவறாக பயன்படுத்தி எதிரியின் மீது பொய் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல, சம்பவத்தின்போது என்மனைவி என்னுடன் தான் இருந்தார். சம்பவத்தின்போது என்னுடன் எனது மனைவியோ, அல்லது சந்தனத்தின் தாயாரோ உடன் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் தேதி நேரத்தில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் தேதி நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**